**செய்தி வெளியீடு எண்:678** **நாள்: 11.10.2017**

மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்கள், படிகள், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்கள் குறித்து மத்திய அரசு எடுத்துள்ள முடிவுகளை ஆராய்ந்து அவற்றை தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு விரிவுபடுத்துவது குறித்து தக்க பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட 'அலுவலர் குழு, 2017' அரசால் அமைக்கப்பட்டது.

தமிழக அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கான திருத்திய ஊதிய விகிதங்கள், படிகள், ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்கள் ஆகியவற்றை உயர்த்தி வழங்குவது குறித்து ஆய்வு செய்த இவ்வலுவலர் குழுவானது 27-09-2017 அன்று அரசுக்கு தனது அறிக்கையினைச் சமர்ப்பித்தது. அக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து அரசு 11.10.2017 அன்று முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. அரசின் ஊதியக் குழு குறித்த முடிவுகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:–

**(அ) ஊதிய விகிதங்கள் திருத்தம்**

- ஊதியக் கற்றைக்கு (Pay Band) பதிலாக ஊதிய அட்டவணை (Pay Matrix) உருவாக்கம். தற்பொழுதுள்ள ஊதிய அமைப்பு (Pay Band) மற்றும் தர ஊதியம் (Grade Pay) என்பதனை நீக்கி அதற்கு பதிலாக ஊதிய அட்டவணை (Pay Matrix) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையானது தற்போது நடைமுறையில் உள்ள 5 ஊதிய அமைப்புகளை (Pay Band) அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்ற 32 தர ஊதியத்திற்கு (Grade Pay) பதிலாக நிலை (Level) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய அமைப்பில் 32 நிலைகள் (Level) உள்ளன (இணைப்பு–1). இந்த ஊதிய அட்டவணையில் (Pay Matrix), 1-1-2016 அன்று ஒரு பணியாளர் வாங்கிய அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையினை மத்திய அரசு பின்பற்றிய 2.57

காரணியால் பெருக்கி வரும் தொகையே அப்பணியாளரின் புதிய ஊதியமாக அமையும்.

**குறைந்தபட்ச/அதிகபட்ச ஊதியத்தின் அளவு:**

- தற்பொழுது குறைந்தபட்ச ஊதியம் ரூ.6100/- என்றும், அதிகபட்சமாக ரூ.77,000/- என உள்ளது. இதுவே, புதிய ஊதிய விகிதத்தில் குறைந்தபட்சமாக நிலை–1ல் ரூ.15700/- என்றும், அதிகபட்சமாக நிலை–32ல் ரூ.2,25,000/- என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு காலமுறை ஊதியம்:**

- சிறப்பு காலமுறை ஊதியம் பெறுவோருக்கும் முறையான பணியிடத்தில் காலமுறை ஊதியம் பெறும் அலுவலர்களைப் போன்று 1-1-2016 அன்று அவர்தம் பெற்றுவந்த அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தின் கூட்டுத்தொகையினை 2.57 காரணியால் பெருக்கி புதிய ஊதிய நிர்ணயம் செய்யப்படும். இதன்படி சிறப்பு காலமுறை ஊதியம் பெறுவோருக்கான குறைந்தபட்ச ஊதியம் நிலை–1ல் ரூ.3,000/- ஆகவும், அதிகபட்ச ஊதியம் நிலை–6ல் ரூ.11,100/- ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது (இணைப்பு–2).

**தொகுப்பூதியம், நிலையான ஊதியம் மற்றும் மதிப்பூதியம்:**

- தொகுப்பூதியம், நிலையான ஊதியம் மற்றும் மதிப்பூதியத்தில் உள்ள பணியாளர்களுக்குக் குறைந்தபட்சமாக 30 விழுக்காடு உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை:**

- ஒரே பணியிடத்தில் 10 ஆண்டுகள் (தேர்வு நிலை) மற்றும் 20 ஆண்டுகள் (சிறப்பு நிலை) பணிமுடித்தவர்களுக்கு அவர்கள் பெறும் அடிப்படை ஊதியத்தில் தற்போது வழங்கப்படும் இரண்டு ஊதிய உயர்வுகள் (3% + 3%) தொடர்ந்து அளிக்கப்படும்.

**ஆண்டு ஊதிய உயர்வு :**

- ஊதிய உயர்வு ஆண்டுக்கு 3 விழுக்காடு என்ற தற்போதைய நிலையில் தொடர்ந்து வழங்கப்படும்.

**தேக்கநிலை ஊதிய உயர்வு மற்றும் ஊக்க ஊதிய உயர்வு :**

- திருத்திய ஊதிய அமைப்பிலும் தேக்கநிலை ஊதிய உயர்வு மற்றும் ஊக்க ஊதிய உயர்வு வழங்கும் முறை தொடர்ந்து வழங்கப்படும்.

**சிறப்பூதியம் :**

- அரசு அலுவலர்கள் தற்போது பெற்றுவரும் சிறப்பூதியத்தில் 50 விழுக்காடு கூடுதலாக உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

**பணியாளர் சீரமைப்பு குழு அமைத்தல் :**

- அரசின் வருவாய் இனச்செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் மற்றும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல் கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ளவும் தக்க பரிந்துரைகளை அளித்திட ‘‘பணியாளர் சீரமைப்பு குழு’’ (Staff Rationalisation Committee) உருவாக்கப்படும்.
- மேற்கண்ட மாற்றங்களால் முக்கிய பணியாளர்களின் சம்பள உயர்வு சராசரி சம்பள (Average Pay) அளவின் அடிப்படையில் கீழ்கண்டவாறு அதிகரிக்கும் :

| வ. எண். | பதவி | (ரூபாய்) | | |
|---|---|---|---|---|
| | | தற்போதைய மாதாந்திர மொத்த ஊதியம் | திருத்திய மாதாந்திர மொத்த ஊதியம் | கூடுதலாகக் கிடைக்கப்பெறும் தொகை |
| 1. | அலுவலக உதவியாளர் (ரூ.4800–10000+த.ஊ.1300) | 21,792 | 26,720 | 4,928 |
| 2. | இளநிலை உதவியாளர் (ரூ.5200–20200+த.ஊ.2400) | 37,936 | 47,485 | 9,549 |
| 3. | இடைநிலை ஆசிரியர் (ரூ.5200 – 20200 +த.ஊ.2800) | 40,650 | 50,740 | 10,090 |
| 4. | ஆய்வாளர் (ச.(ம) ஒ.) (ரூ.9300– 34800 +த.ஊ.5100) | 69,184 | 84,900 | 15,716 |

| வ. எண். | பதவி | (ரூபாய்) | | |
|---|---|---|---|---|
| | | தற்போதைய மாதாந்திர மொத்த ஊதியம் | திருத்திய மாதாந்திர மொத்த ஊதியம் | கூடுதலாகக் கிடைக்கப்பெறும் தொகை |
| 5. | துணை ஆட்சியர் (ரூ.15600– 39100 +த.ஊ.5400) | 81,190 | 98,945 | 17,755 |
| 6. | சத்துணவு அமைப்பாளர் (ரூ.2500– 5000+த.ஊ.500) | 10,810 | 13,720 | 2,910 |
| 7. | சத்துணவு சமையலர் (ரூ.1300– 3000 +த.ஊ.300) | 6,562 | 8,680 | 2,118 |

### (ஆ) படிகள் குறித்த திருத்தம்

❖ தற்போது அரசுப் பணியாளர்களுக்கு 40 வகைக்கும் மேற்பட்ட படிகள் வழங்கப்பட்டு வருகின்றன. படிகள் திருத்தியமைப்பதனைப் பொருத்தவரை, சில படிகளைத் தவிர அனைத்துப் படிகளுக்கும் 100 விழுக்காடு உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

**அகவிலைப்படி**

❖ மத்திய அரசால் வழங்கப்படும் அகவிலைப்படியின் வீதம் மற்றும் தேதியினைப் பின்பற்றி மாநில அரசு ஊழியர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்படும்.

**வீட்டு வாடகைப்படி**

❖ திருத்தியமைக்கப்படும் ஊதியத்தில் தற்போதைய படித்தர வீதங்கள் (slab rates) மூலம் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படுவதுடன், சில மாநகரங்கள் / நகரங்கள் திருத்தி வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| நிலை (Grade) | இடம் | தற்போது வழங்கப்படும் தொகை | | திருத்தியமைக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| | | (ரூபாய்) | | | |
| I(a) | சென்னை மற்றும் அதன் 32 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்கள். | 500 | 3500 | 1300 | 8300 |
| I(b) | கோயமுத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் ஈரோடு மற்றும் அதன் 16 கி.மீ சுற்றளவில் உள்ள இடங்கள். | 300 | 1800 | 700 | 4300 |

| நிலை (Grade) | இடம் | தற்போது வழங்கப்படும் தொகை | | திருத்தியமைக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| | | (ரூபாய்) | | | |
| II | மத்திய அரசால் சிறப்பு நிலையில் வகைபடுத்தப்பட்ட (C Grade) ஆம்பூர், அரக்கோணம் உள்ளிட்ட இடங்கள், இதர மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராடசிகள் அதன் 8 கி.மீ சுற்றளவில் உள்ள இடங்கள். | 240 | 1400 | 600 | 3200 |
| III | இதர நகராட்சிகள் மற்றும் வட்ட தலைமையகங்கள். | 160 | 1000 | 400 | 2200 |
| IV | வகைப்படுத்தப்படாத இதர இடங்கள். | 120 | 400 | 250 | 850 |

**நகர ஈட்டுப்படி**

❖ தற்போதையே நகர ஈட்டுப்படி வீதங்கள் இருமடங்காக உயர்த்தி நிர்ணயம் செய்யப்படுவதுடன், சில மாநகரங்கள் நிலை உயர்த்தி திருத்தி வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**படிகள்**

| வ. எண் | படிகள் | தற்போது வழங்கப்படும் தொகை | | திருத்தியமைக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிகபட்சம் | குறைந்த பட்சம் | அதிகபட்சம் |
| | | (ரூபாய்) | | | |
| 1 | மருத்துவப்படி [Medical Allowance] | 100 | | 300 | |
| 2 | சீருடை தையல் கூலி [Stitching Charges] | 200 | 450 | 400 | 500 |
| 3 | சலவைப்படி [Washing Allowance] | 60 | 450 | 200 | 500 |
| 4 | பிணஆராய்வுப் படி [Post Mortem Allowance] | 24 | 150 | 75 | 300 |
| 5 | தொழுநோய் படி [Leprosy Allowance] | 40 | 800 | 120 | 2000 |
| 6 | மலை வாழ் படி (20 சதவீதம் ) [Hill Allowance] | 1220 | 1500 | 3140 | 6000 |
| 7 | குளிர் காலப் படி (5/10 சதவீதம் ) [Winter Allowance] | 305 | 500 | 785 | 1500 |
| 8 | அலுவலர் உதவியாளர் பணியிட ஒப்படைப்புப் படி [Residential Office Assistant surrendered In lieu of Cash Allowance] | 500 | | 1000 | 1500 |

| வ. எண் | படிகள் | தற்போது வழங்கப்படும் தொகை | | திருத்தியமைக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிகபட்சம் | குறைந்த பட்சம் | அதிகபட்சம் |
| 9 | இந்திய குடிமைப்பணி அலுவலர் இல்ல அலுவலக உதவியாளர் தொகுப்பூதியம் | 8000 | | 12000 | |
| 10 | பார்வைக் குறைபாடுடையோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் காதுகேளாதோரின் ஊர்திப்படி [Conveyance Allowance to Visually Challenged, Locomotor Disabled and Hearing Impaired] | 1000 | | 2500 | |

**<u>பிற படிகள்</u>**

- தற்போது அனுமதிக்கப்படும் பிற படிகளை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

**<u>பயணப்படி :</u>**

- தற்போதைய நிலையினை கருத்தில் கொண்டு திருத்திய ஊதிய விகிதத்திற்கு ஏற்றாற்போல பயணப்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## (இ) ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகால பலன்கள்

- 1-1-2016-இல் பெற்று வரும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தினை **2.57** என்ற காரணியால் பெருக்கி திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு திருத்தியமைக்கப்படும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியமானது, குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ஓய்வூதியத்திற்குள்ளும், தனியர்கள் இறுதியாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற பதவிக்கான திருத்திய ஊதிய நிலையின் தொடக்க ஊதியத்தில் முறையே **50** / **30** சதவீதம் குறையாமலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் குறைந்தபட்ச ஓய்வூதியமானது, முழு ஓய்வூதியம் பெற தகுதியான பணிக்காலமான **30** வருடங்களைவிட நிகர பணிக்காலம் குறைவாக இருக்கும் நேர்வுகளில், அவ்விகிதத்திற்கு ஏற்ப குறையும்.

- 1-1-2016–க்கு பின்னர் ஓய்வுபெறுபவர்களது ஓய்வூதியம் திருத்திய ஊதியத்தில் இறுதியாக பெற்றுள்ள அடிப்படை ஊதியத்தில் **50** சதவீதம்

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியமானது, குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ஓய்வூதியத்திற்குள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனினும் அந்த ஓய்வூதியமானது, முழு ஓய்வூதியம் பெற தகுதியான பணிக்காலமான 30 வருடங்களைவிட குறைவாக இருக்கும் நேர்வுகளில், அவ்விகிதத்திற்கு ஏற்ப குறையும்.

- ❖ வயது முதிர்வின் அடிப்படையில் தற்போது அனுமதிக்கப்படும் கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் 80, 85, 90, 95, 100 வயதினருக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

- ❖ ஒரு அரசு பணியாளர் ஓய்வு பெறும் முன்னரே இறக்கும்பட்சத்தில், அவர் இறுதியாக பெற்றுவந்த அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதத்தினை குடும்ப ஓய்வூதியமாக, அடுத்துவரும் 10 ஆண்டுகள் அல்லது அப்பணியாளர் 65 வயதினை அடையும் நாள் இவற்றில் எது முன்னதோ அதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஒரு பணியாளர் ஓய்வுபெற்ற பின்னர் இறக்கும்பட்சத்தில் அவர் ஓய்வுபெறும் போது வழங்கப்பட்ட ஓய்வூதியத்திற்கு இணையான குடும்ப ஓய்வூதியத்தினை அப்பணியாளர் உயிருடன் இருந்திருந்தால் 65 வயதினை அடையும் நாள்வரை அனுமதிக்கப்பட்டுள்ளது.

- ❖ குடும்ப ஓய்வூதியத்தினை சார்ந்துள்ளவர்களுக்கு அனுமதிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வருவாய் உச்ச வரம்பினை குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதிய தொகைக்கு இணையாக (ரூ.7,850/–ஆக) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**<u>குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ஓய்வூதியம் –</u>**

- ❖ ஓய்வூதியத்தினைப் பொருத்தவரை தற்போது குறைந்தபட்சமாக ரூ.3050/– ம் அதிகபட்சமாக ரூ.38500/– ம் வழங்கப்பட்டு வருகின்றது. திருத்திய

ஊதியத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:-

| | **ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு)** | **குடும்ப ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு)** |
|---|---|---|
| **குறைந்தபட்சம்** | ரூ.7850/– | ரூ.7850/– |
| **அதிகபட்சம்** | ரூ.1,12,500/– | ரூ.67,500/– |

**<u>அகவிலைப்படி–</u>**

- அரசு பணியாளர்களுக்கு திருத்திய ஊதியத்தில் அனுமதிக்கப்படும் அகவிலைப்படியினை, ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கும் அதே விகிதத்தில், அதே நாள் முதல் வழங்கப்பட்டுள்ளது.

**<u>இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடை–</u>**

- 01–01–2016 முதல் இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடையை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**<u>இறப்புப் பணிக்கொடை–</u>**

- பணியில் இருக்கும்பொழுது மரணம் அடையும் அரசு பணியாளர்களின் இறப்பு பணிக்கொடைக்கான விகிதம் மத்திய அரசின் ஆணைகளின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**<u>(ஓ) ஓய்வூதியம் தொகுத்துப்பெறுதல் –</u>**

- தற்போது பெற்றுவரும் விகிதத்தின் (ஓய்வூதியத்தில் 1/3 பங்கு) அடிப்படையில் திருத்திய ஊதியத்திலும் ஓய்வூதியத்தினை தொகுத்துப் பெறலாம்.

**<u>சிறப்பு ஓய்வூதியம் / பணியிலிருந்து ஓய்வு பெறும் போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை (Lumpsum Grant) கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து வழங்கப்பட்டுள்ளது :–</u>**

| வ. எண் | பதவியின் பெயர் | சிறப்பு ஓய்வூதியம் | | பணியிலிருந்து ஓய்வு பெறும் போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை | |
|---|---|---|---|---|---|
| | | தற்போது வழங்கப்படும் தொகை | திருத்தியமைக்கப்பட்ட தொகை | தற்போது வழங்கப்படும் தொகை | திருத்தியமைக்கப்பட்ட தொகை |
| 1. | சத்துணவு அமைப்பாளர் | 1,500* | 2000 | 60,000 | 1,00,000 |
| 2. | சமையலர், சமையல் உதவியாளர் | 1,500* | 2,000 | 25,000 | 50,000 |
| 3. | அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் உட்பட | 1,500* | 2,000 | 60,000 | 1,00,000 |
| 4. | அங்கன்வாடி உதவியாளர் | 1,500* | 2,000 | 25,000 | 50,000 |
| 5. | கிராம பஞ்சாயத்து செயலர் | 1,500* | 2,000 | 60,000 | 1,00,000 |
| * 01.02.2016 லிருந்து ரூ.1000 லிருந்து ரூ.1500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது | | | | | |

**<u>இதுவரை சிறப்பு ஓய்வூதியம் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை வழங்கப்படாத சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் கீழ்க்கண்ட பணியாளர்களுக்கும் இச்சலுகைகள் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது:–</u>**

| வ. எண். | துறை/ பதவியின் பெயர் | சிறப்பு ஓய்வூதியம் | பணியிலிருந்து ஓய்வு பெறும் போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை |
|---|---|---|---|
| **I.** | **பள்ளிக் கல்வி** | **(ரூபாய்)** | |
| 1. | கிராம நூலகர் | **2,000** | **1,00,000** |
| **II.** | **அனைத்து அரசு துறை /உள்ளாட்சி மன்றங்கள்** | | |
| 2. | துப்புரவாளர் / சுகாதார ஊழியர்கள் / துப்புரவு பணியாளர்கள் | **2,000** | **50,000** |
| **III.** | **வனம்** | | |
| 3. | தோட்டக் காவலர் | **2,000** | **1,00,000** |
| 4. | வேட்டைத் தடுப்பு காவலர் | **2,000** | **1,00,000** |
| **IV.** | **காவல் துறை** | | |
| 5. | காவல் நிலைய துப்புரவாளர் | **2,000** | **50,000** |
| 6. | ஆயா | **2,000** | **50,000** |

**நடைமுறைபடுத்தும் நாள் :**

தற்போது வரிவருவாயின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க நிலையில் இல்லாததால் காலமுறை ஊதியம் / சிறப்பு காலமுறை ஊதியம் / தொகுப்பூதியம் / மதிப்பூதியம் / நிலை ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் 01–01–2016 முதல் கருத்தியலாகவும், 01–10–2017 முதல் பணப்பயன் வழங்கும்படியும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் 01–01–2016 முதல் 30–09–2017 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு திருத்திய ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பலன்களை இரண்டு தவணைகளில், அதாவது முதல் தவணை நடப்பு 2017–2018 நிதியாண்டிலும், இரண்டாவது தவணையை அடுத்த 2018–2019 நிதியாண்டிலும் வழங்கப்படும் என முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

**கூடுதல் தொடர் செலவினம்**

மேற்கூறிய அலுவலர் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் தொடர் செலவினம் ரூ.14,719 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாகும் மொத்த தொகையான ரூ.14,719 கோடியில் ரூ.8015.99 கோடி ரூபாய் அரசு அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் படிகளுக்கானதாகும். ரூ.6702.91 கோடி ஓய்வூதியம் மற்றும் 01.01.2016 முதல் 30.09.2017 வரையிலான காலக்கட்டத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வுக்கால பலன்களின் நிலுவைத் தொகையாகும்.

## இணைப்பு-1

## LIST OF LEVELS OF PAY
## [REGULAR GOVERNMENT EMPLOYEES]

| Sl. No. | Group | Existing Scales of Pay | | Proposed Levels of Pay | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Pay Band | Grade Pay | Level | Minimum | | Maximum |
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] | | [7] |
| | | REGULAR EMPLOYEES | | | | | |
| 1 | D | PB-1A Rs.4800-10000 | 1300 | **1** | 15700 | - | 50000 |
| 2 | C | | 1400 | **2** | 15900 | - | 50400 |
| 3 | C | | 1650 | **3** | 16600 | - | 52400 |
| **4** | **C** | **PB-1 Rs.5200-20200** | **1800** | **4** | **18000** | **-** | **56900** |
| 5 | C | | 1900 | **5** | 18200 | - | 57900 |
| 6 | C | | 2000 | **6** | 18500 | - | 58600 |
| 7 | C | | 2200 | **7** | 19000 | - | 60300 |
| 8 | C | | 2400 | **8** | 19500 | - | 62000 |
| 9 | C | | 2600 | **9** | 20000 | - | 63600 |
| 10 | C | | 2800 | **10** | 20600 | - | 65500 |
| **11** | **8C** | **PB-2 Rs.9300-34800** | **4200** | **11** | **35400** | **-** | **112400** |
| 12 | C | | 4300 | **12** | 35600 | - | 112800 |
| 13 | B | | 4400 | **13** | 35900 | - | 113500 |
| 14 | B | | 4450 | **14** | 36000 | - | 114000 |
| 15 | B | | 4500 | **15** | 36200 | - | 114800 |
| 16 | B | | 4600 | **16** | 36400 | - | 115700 |
| 17 | B | | 4700 | **17** | 36700 | - | 116200 |
| 18 | B | | 4800 | **18** | 36900 | - | 116600 |
| 19 | B | | 4900 | **19** | 37200 | - | 117600 |
| 20 | B | | 5100 | **20** | 37700 | - | 119500 |
| **21** | **B** | **PB-3 Rs.15600-39100** | **5200** | **21** | **55500** | **-** | **175700** |
| **22** | **B** | | **5400** | **22** | **56100** | **-** | **177500** |
| 23 | B | | 5700 | **23** | 56900 | - | 180500 |
| 24 | B | | 6000 | **24** | 57700 | - | 182400 |
| 25 | A | | 6600 | **25** | 59300 | - | 187700 |
| 26 | A | | 7600 | **26** | 61900 | - | 196700 |
| 27 | A | | 7700 | **27** | 62200 | - | 197200 |
| **28** | **A** | **PB-4 Rs.37400-67000** | **8700** | **28** | **123100** | **-** | **209600** |
| 29 | A | | 8800 | **29** | 123400 | - | 216300 |
| 30 | A | | 8900 | **30** | 123600 | - | 216600 |
| 31 | A | | 9500 | **31** | 125200 | - | 219800 |
| 32 | A | | 10000 | **32** | 128900 | - | 225000 |

## இணைப்பு-2

**LIST OF LEVELS OF PAY**
**[EMPLOYEES ON SPECIAL TIME SCALES OF PAY]**

| Sl. No. | Group | Existing Scales of Pay | | Revised Levels of Pay | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Pay Band | Grade Pay | Level | Minimum | - | Maximum |
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] | | [7] |
| 1 | | STS-1 Rs.950-2000 | 200 | **1** | 3000 | - | 9000 |
| 2 | | STS-2 Rs.1300-3000 | 300 | **2** | 4100 | - | 12500 |
| 3 | | STS-3 Rs.1800-3300 | 400 | **3** | 5700 | - | 18000 |
| 4 | | STS-4 Rs.2500-5000 | 500 | **4** | 7700 | - | 24200 |
| 5 | | STS-5 Rs.3500-6000 | 600 | **5** | 10500 | - | 33100 |
| 6 | | STS-5 Rs.3500-6000 | 800 | **6** | 11100 | - | 35100 |

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**